# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/12 - 2018 මැයි මස 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15

*2071/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2012*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாச் சட்டம்**

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்டதும், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

பணிப்பாளர் தலைமையதிபதி,
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை.

கொழும்பு,
2018, மே 02.

விதிகள்

1. இவ்விதிகள், 2018 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சேவைகள் என்பவற்றுக்கு உரிமமளித்தல்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி ஒன்றை அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவை ஒன்றை கொண்டுநடாத்துவதற்கான உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையின் ஆற்றலையும் திறமையையும் எடுத்துக்காட்டும் விபரமான அறிக்கை ஒன்றுடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செய்யப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமானவிடத்து, மேலதிக தகவலை கொடுத்துதவுவதற்கு விண்ணப்பதாரியை தேவைப்படுத்தலாம்.

3. இரண்டாம் விதியின் கீழான விண்ணப்பம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி அந்நோக்கத்திற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவருக்கு எந்த சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சியுடன் அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையுடன் விண்ணப்பம் தொடர்புபடுகின்றதோ அந்த சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையின் சோதனையினை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியானவர், பரிசோதகர் ஒருவராக ஆளொருவரை நியமிக்கின்றபோது, அத்தகைய ஆள் இயைபான துறையில் போதுமான தகைமை அல்லது அனுபவத்தைக் கொண்டுள்ளார் என்பது பற்றிய நிகழ்வை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.


1A - PG 4040 — 57 (2018/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. பரிசோதகர் தனது சோதனையைப் பூர்த்திசெய்வதன் மேல், குறித்துரைக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையில் அவரால் நிறைவேற்றப்பட்ட சோதனை மீது இயைபான விபரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்காட்டி, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. நான்காம் விதியின் கீழான அறிக்கையினைப் பெற்றுக்கொண்டதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி அறிக்கையில் அடங்கியுள்ள கருமங்களையும், விதப்புரைகள் ஏதேனும் இருப்பின் அதனையும் கவனத்திற்கொண்டு, ஒன்றில் அத்தகைய சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவை என்பவற்றுக்காக உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரால் பதிவுசெய்யப்பட்ட காரணங்களுக்காக உரிமத்தை மறுத்தல் வேண்டும்.

6. பணிப்பாளர் தலைமையதிபதி, காலத்திற்குக் காலம் உரிமம் பெற்ற சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம். அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையின் நியமனங்களைப் பார்வையிடுதலும் பரிசோதித்தலும் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

7. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அத்தகைய உதவி மற்றும் ஆதரவை அளித்தல், அத்தகைய சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப் பயணிகள் சேவையின் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

*06-30*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.